





श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# நீராட்டம்

*n-IrAttam*

# நீராட்டம்

## ஸ்ரீ பெரியாழ்வார் அருளிச்செய்த

*வெண்ணெய் அளைந்த குணுங்கும்*
*விளையாடு புழுதியும் கொண்டு*
*திண்ணென இவ்விரா உன்னைத்*
*தேய்த்துக் கிடக்க நானொட்டேன்*
*எண்ணெய்ப் புளிப்பழம் கொண்டு*
*இங்கெத்தனை போதும் இருந்தேன்*
*நண்ணல் அரிய பிரானே*
*நாரணா நீராட வாராய்* [1] [0152]

கன்றுகள் ஓடச் செவியில்
கட்டெறும்பு பிடித்திட்டால்
தென்றிக் கெடுமாகில்
வெண்ணெய் திரட்டி விழுங்குமா காண்பன்
நின்ற மராமரம் சாய்த்தாய்
நீ பிறந்த திருவோணம்
இன்று நீ நீராட வேண்டும்
எம்பிரான் ஓடாதே வாராய் [2] [0153]

பேய்ச்சி முலை உண்ணக் கண்டு
பின்னையும் நில்லாது என் நெஞ்சம்
ஆய்ச்சியர் எல்லாரும் கூடி
அழைக்கவும் நான் முலை தந்தேன்
காய்ச்சின நீரொடு நெல்லி
கடாரத்தில் பூரித்து வைத்தேன்
வாய்த்த புகழ் மணிவண்ணா
மஞ்சனம் ஆட நீ வாராய் [3] [0154]

கஞ்சன் புணர்ப்பினில் வந்த
கடிய சகடம் உதைத்து
வஞ்சகப் பேய்மகள்துஞ்ச
வாய் முலை வைத்த பிரானே
மஞ்சளும் செங்கழு நீரின்
வாசிகையும் நாறு சாந்தும்
அஞ்சனமும் கொண்டு வைத்தேன்
அழகனே நீராட வாராய் [4] [0155]

## நீராட்டம்

அப்பம் கலந்த சிற்றுண்டி
        அக்காரம் பாலில் கலந்து
சொப்பட நான் சுட்டு வைத்தேன்
        தின்னல் உறிதியேல் நம்பி
செப்பிள மென்முலை யார்கள்
        சிறுபுறம் பேசிச் சிரிப்பர்
சொப்பட நீராட வேண்டும்
        சோத்தம் பிரான் இங்கே வாராய் [5] [0156]

எண்ணெய்க் குடத்தை உருட்டி
        இளம் பிள்ளை கிள்ளி யெழுப்பி
கண்ணைப் புரட்டி விழித்துக்
        கழகண்டு செய்யும் பிரானே
உண்ணக் கனிகள் தருவன்
        ஒலிகடல் ஓத நீர் போலே
வண்ணம் அழகிய நம்பீ
        மஞ்சனம் ஆட நீ வாராய் [6] [0157]

கறந்த நல் பாலும் தயிரும்
        கடைந்துறிமேல் வைத்த வெண்ணெய்
பிறந்ததுவே முதால்கப்
        பெற்றறியேன் எம்பிரானே
சிறந்த நல் தாய் அலர் தூற்றும்
        என்பதனால் பிறர் முன்னே
மறந்தும் உரையாட மாட்டேன்
        மஞ்சனம் ஆட நீ வாராய் [7] [0158]

கன்றினை வால் ஓலை கட்டிக்
        கனிகள் உதிர எறிந்து
பின் தொடர்ந்தோடி ஓர் பாம்பைப்
        பிடித்துக் கொண்டாட்டினாய் போலும்
நின் திறத்தேன் அல்லேன் நம்பி
        நீ பிறந்த திருநன்னாள்
நன்று நீ நீராட வேண்டும்
        நாரணா ஓடாதே வாராய் [8] [0159]

# நீராட்டம்

பூணித் தொழுவினில் புக்குப்
        புழுதி அளைந்த பொன்மேனி
காணப் பெரிதும் உகப்பன்
        ஆகிலும் கண்டார் பழிப்பர்
நாண் இத்தனையும் இலாதாய்
        நப்பின்னை காணில் சிரிக்கும்
மாணிக்கமே என் மணியே
        மஞ்சனம் ஆட நீ வாராய் [9] [0160]

*கார்மலி மேனி நிறத்துக்*
        *கண்ணபிரானை உகந்து*
*வார்மலி கொங்கை யசோதை*
        *மஞ்சனம் ஆட்டிய ஆற்றை*
*பார் மலி தொல் புதுவைக் கோன்*
        *பட்டர் பிரான் சொன்ன பாடல்*
*சீர் மலி செந் தமிழ் வல்லார்*
        *தீவினை யாதும் இலரே* [10] [0161]